**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.**

OS.No. 709/2008

**வா.சா.2** **தேதி:- 04-07-2026**

**பெயர்-திரு. மயில்சாமி**

**த/பெ - திரு. ராஜப்பகவுண்டர்**

வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்குவிசாரணை தொடரப்படுகிறது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.13 கடிதத்தை முதல் பிரதிவாதி நிறுவனம் ஒப்பந்த தாரர்களுக்கு அனுப்பிய விவரம் அதற்கு ஒப்பந்ததாரர்கள் வா.சா.ஆ.14 பதில் அறிவிப்பை அனுப்பிய விவரமும் அதற்கு முதல் பிரதிவாதி பி. வா.சா.ஆ.8 பதில் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த சமயத்தில் தெரியாது OS 705/2007 உறுத்துகட்டளை வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தான் தெரியும். வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14,

பி. வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்கள் வா.சா.ஆ.23 க்கு முன்பு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 மற்றும் பி. வா.சா.ஆ.8 முதல் பிரதிவாதி ஒப்பந்த காலம் 31.08.2005 அதோடு முடிந்து விட்டதால் தாவா சொத்தை கிரையம் பெறும் உரிமையை ஒப்பந்ததாரர்கள் இழந்து விட்டார்கள் என முதல் பிரதிவாதி கூறியுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை தெரிந்து கொண்ட பின்னர் தான் நான் வா.சா.ஆ.23 Assignment பெற்றேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.23 ற்கு பின்னிட்டு நான் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.2 படி முதல் பிரதிவாதிக்கு செலுத்த வேண்டிய

அனைத்து தொகைகளையும் செலுத்த தயாராக இருப்பதாக எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.23 07.12.2005 தேதியில் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.23 ஏற்பட்ட பின்னர் சுமார் 2 வருடங்கள் பின்னிட்டு தான் அசல் வழக்கு எண் 705/2007 தாக்ககல் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதன்முதலாக அந்த வழக்கில் வா.சா.ஆ.23 Assignment பற்றி கூறப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 705/2007 வழக்கு பிராது பி.வா.சா.ஆ 3 ஆகும். அந்த பிராதில் நான் 2 ம் வாதியாக காட்டப்பட்டுள்ளேன். மேற்படி வழக்கை ராமஜெயம் மற்றும் ஆறுமுகம் சார்பாகவும் தாக்கல் செய்வதற்கு K.G. சேமசுந்தரத்திற்கு அதிகாரம் இல்லை என முதல் பிரதிவாதி ஆட்சேபணை செய்து அந்த ஆட்சேபணை சென்னை உயர்நீதிமன்றத்தால் CRP 1259/2009 என்ற வழக்கில் முடிவு ஏற்பட்டது. அதில் நான் மற்றும் சோமசுந்தரம் தரப்பினர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் CRP 1259/2009 என்ற வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்தரவில் சென்னை உயர்நீதிமன்றம் OS 705/2007 ல் வாதிகளாக காட்டப்பட்ட ராமஜெயம் மற்றும் ஆறுமுகம் ஆகிய இருவருக்கும் அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று கூறியது. OS 705/2007 15.12.2017 அன்று தள்ளுபடி ஆகி விட்டது என்றால் சரிதான். ஆனால் அவ்வழக்கு மீண்டும் மறுவிசாரணைக்கு சீராய்வு மனுஎண்.4088/2008 மூலம் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அந்த உத்தரவை நான் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.23 Assignment ஒப்பந்தம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் கோயமுத்தூர் வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டது. நானும் 2ம் பிரவவாதி நவநீதனும் திப்பூரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.23 தயாரிக்கப்பட்ட முத்திரை தாள்கள் அரியலூர் மாவட்டத்தில் வாங்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதை 2ம் பிரதிவாதி தான் தயாரித்து கொண்டு வந்தார். வா.சா.ஆ.12 ல் ஒப்பந்ததார்களான ராமஜெயம், நவநீதன், ஆறுமுகம் மற்றும் சோமசுந்திரம் ஆகிய நால்வரும் SSI நிறுவனத்தின் ஆலோசகர் நீலகண்டனிடம் பேசியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக தான் வா.சா.ஆ.12 யை SSI நிறுவனத்தின் தலைவர் திரு. சுரேண் என்பவர் ஒப்பந்ததார்கள் நால்வருக்கும் Fax மூலமாக அனுப்பியதாக கண்டுள்ளது. வா.சா.ஆ.12 ல் இவ்வழக்கின் 4ம் வாதி சோமசுந்தரம் இவ்வழக்கு முதல் பிரதிவாதிக்கு அனுப்பியதாக கூறப்படும் 31.08.2005 கடிதத்தில் நானும் இவ்வழக்கு 3, 4 வாதிகளும் SSI நிறுவனத்தை சேர்ந்தவர்களும் 31.08.2005 அன்று முதல் பிரதிவாதி அலுவலகத்திற்கு நேரடியாக சென்றதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ஆனால் மாலை 3.15 மணிக்கு அவர்கள் சென்னையில் இருந்து வந்துவிட்டார்கள், அதன்பின்னர் மாலை 5.00 மணிக்கு வரைவோலை எடுத்து கொண்டு முதல் பிரதிவாதி அலுவலகத்திற்கு சென்றோம். நாங்கள் முதல் பிரதிவாதியின் பொது மேலாளராக கோவிந்தராஜ்யை சந்தித்தோம், அவர் முதல் பிரதிவாதியின் தலைவர் ஊரில் இல்லை என கூறினார். மேலும் ஒரு வாரம் கழித்து எங்களை வருமாறு

கூறினார். இந்த காரணத்தினால் வரைவோலையை கோவிந்தராஜ் வாங்க மறுத்து விட்டார். அதனால் நாங்கள் திரும்ப வந்து விட்டோம். அதன் பின்னர் அன்று வேறு எதுவும் நடக்கவில்லை. நாங்கள் முதல் பிரதிவாதியின் பொது மேலாளர் கோவிந்தராஜ்ற்கு காண்பித்ததாக கூறுவது அசல் வரைவோலையாக அல்லது அசல் வரைவோலையின் புகைப்பட நகலா என்றால் அசல் வரைவோலையை தான் காண்பித்தோம். வா.சா.1 சோமசுந்தரம் இந்த வழக்கில் சாட்சி அளித்த ஒவ்வொரு முறையும் நானும் இந்த நீதிமன்றதில் ஆஜராக இருந்தேன் என்றால் சில சமயம் வந்தேன். 23.07.2025 மற்றும் 04.08.2025 ஆகிய தேதிகளில் வா.சா.1 சோமசுந்தரம் இவ்வழக்கில் சாட்சி அளித்ததில் அதில் அவர் கோவிந்தராஜிடம் காண்பித்ததாக கூறியது, வரைவோலைகளின் புகைப்பட நகல்தான் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான், நாங்கள் 5.00 மணிக்கு அசல் வரைவோலை உடன் தான் சென்றோம். வா.சா.ஆ.12 ற்கு பின்னிட்டு ஒப்பந்த தாரர்கள் அனுப்பியதாக கூறும் வா.சா.ஆ.16 கடிதத்திலும் நான் செல்வது போல் 31.08.2005 ல் நடந்ததாக கூறும் விவரங்கள் பற்றி குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ.14 லிலும் 31.08.2005 ல் நானோ 3, 4 வாதிகளோ அல்லது SSI நிறுவனத்தை சேர்ந்தவர்களோ முதல் பிரதிவாதி நிறுவனத்திற்கு நேரடியாக சென்றதாக எந்த குறிப்பு இல்லை என்றால் சரிதான். 31.08.2005 ல் நடைபெறதாக விவரத்தை நடந்ததாக கூறி அந்த சமயத்தில் வா.சா.ஆ.2 ற்கு சம்பந்தமில்லாத நானும் அங்கே சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் முதல் பிரதிவாதி அலுவலகத்திற்கு சென்றதாக

கூறும் 31.08.2005 அன்று ராமஜெயம் மற்றும் நவநீதன் ஆகியோர்களும் முதல் பிரதிவாதி அலுவலகத்திற்கு வந்ததாக என் வழக்கு அல்ல என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலம் பக்கம் 5 ற்கு முரணாக இவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 தேதியில் இருந்து வா.சா.ஆ.23 Assignment தேதி வரை 2 ம் பிரதிவாதி நவநீதன் பாக்கிய கிரைய தொகையை செலுத்த தயாராக இருந்தார் என்பதை காண்பிக்க நாங்கள் இதுவரை இந்த நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் பணம் இருந்தது. நவநீதன் என்னிடம் பெற்றதாக கூறும் ரூபாய் 1, 20,00,000/ என்ற தொகை திருப்பி செலுத்த முடியாமல் இருந்த நிலையில் தான் வா.சா.ஆ 23 யை நான் பெற்றேன் என்பது என் வழக்கு என்றால் சரிதான். அவரிடம் கணக்கில் வராத( unaccounted cash) ரொக்கம் இருந்ததால், வா.சா.ஆ.23 என ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நான் மேற்படி கூறும் பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறுவில்லை என்றால் சரிதான். 31.08.2005 ற்கு பின்னர் உடடியாக ஒப்பந்ததார்கள் முதல் பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதைஆற்றுதல் பரிகாரம் ஏன் உடனடியாக தொடரவில்லை என்று எனக்கு தெரியாது என்றால் முதல் பிரதிவாதியிடம் திரு.ரவிராஜ் பேச்சுவார்த்தை நடத்தி கொண்டு இருந்தார், இந்த விவரத்தை பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதிக்கும் ரவிராஜிற்கும் எந்தவித பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 தேதியில் இருந்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை ஒப்பந்ததாரர்கள் வசம் பாக்கி கிரைய தொகை இருந்ததை காண்பிக்க

நீதிமன்றத்தில் இதுவரை எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2. மற்றும் 6 ஒப்பந்தங்களை ஒப்பந்ததாரர்கள் மீறியதால் அவர்களுக்கு எந்த பரிகாரமும் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்ததார்களுக்கே எந்த உரிமையும் இல்லாத போது வா.சா.ஆ.23 மூலமாக எனக்கு இவ்வழக்கில் எவ்வித உரிமையும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23 ஒரு பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. எனக்கோ மற்ற வாதிகளுக்கோ எந்த உரிமையும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

நானும் என்னுடைய மனைவியிம் Union Bank of India திருப்பூரில் பராமரித்து வரும் வங்கிக் கணக்கின் மேலாளர் சான்றளித்த கணக்கு பட்டியல் **வா.சா.ஆ.27.**எனது மனைவி தனலட்சுமி பெயரில் உள்ள Union Bank of India திருப்பூரில் பராமரித்து வரும் வங்கிக் கணக்கின் மேலாளர் சான்றளித்த கணக்கு பட்டியல் **வா.சா.ஆ.28.** எனது நிறுவனமாக RMS Textile process ன் Union Bank of India திருப்பூரில் பராமரித்து வரும் வங்கிக் கணக்கின் மேலாளர் சான்றளித்த கணக்கு பட்டியல் **வா.சா.ஆ.29.**

**குறுக்குவிசாரணை இல்லை.**

சாட்சியம் முழுவதும் சாட்சி கூறிய முறையில் என்னால் திறந்த வழக்கரங்கில் பதிவு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

/Sd/Thiru.A.K.Babulal,

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

கோயம்புத்தூர்.